முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்தமகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆனி மாதம் 31 திகதி முதல்
சோபகிருது வருடம் ஆடி மாதம் 7 திகதி வரை
(16.07.2023 ஞாயிறு முதல் 23.07.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. காண கண்கோடி வேண்டும்
   கண்டுவணங்க ஞானம் வேண்டும்
   தானென்ற செருக்கை உடைத்து
   தயவே வடிவாக வந்தவள்ளல்
2. வள்ளல் ஞானி அரங்கமகானை
   வந்தனுக புண்ணியபலம் வேண்டும்
   வள்ளல் அரங்கன் பெருமைகூறி
   வார ஆசிதனை அகத்தியமகரிஷி யானும்
3. யானும் சோபகிருது மிதுனத்திங்கள்
   முப்பானோர் திகதிமேல் நள்ளித்திங்கள்
   ஞானம்பட நாததிகதி வரைக்கும்
   நடக்கும் வார நிகழ்வாக
4. ஆகவே இந்தியா தமிழகத்தில்
   ஆசிதனை வருங்காலபலனாக உரைப்பேன்
   வகைபட கலியின் தீர்ப்புகள்
   வள்ளல் மகா சக்திகளெல்லாம்
5. எல்லாம் அநீதி மாந்தர்கள்மேல்
   ஈடேற்றம் நிகழ இருக்க
   வல்லமைபட ஊழல் புரிவோர்
   வாரிச்சுருட்டி தனக்கென பதுக்கல்

6. பதுக்கல் செய்தவர்களெல்லாம்
பாருலகம் பார்வைக்கு வந்து
எதற்காகச் செய்தோம் தவறென
இகழ்வு இழிவுகாணும் வண்ணம்
7. வண்ணமுடன் கலியின் முடிவுகள்
வரலாறுதனை படைக்குமப்பா
எண்ணம் களங்கமுள்ளவர்
எல்லாம் தனக்கென வாழ்பவர்கள்
8. வாழ்பவர்கள் அனைத்து பேரும்
வகை கண்டிடும் முன்னே
ஊழ்போக்கும் மகா ஞானியர்
உண்மைதடம் அனுகிப் பணிந்து
9. பணிந்து தரும வழியை பற்றிட
பதுக்கல் சுரண்டல் வினையாவும்
இனிதொடரா அகன்று மேவி
எல்லாம் தருமபலனாக மாறி
10. மாறியே நல்லாட்சி ஞான ஆட்சி
மக்களை காக்கும் மதிக்கும்
ஆறுமுகனார் ஆசிபெற்ற ஆட்சியாக
ஆளுமைதனை இந்தியா தமிழகம் கண்டுசிறக்கும்

வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆனி மாதம் 31ம் நாள் 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 07ம் நாள் 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஆறுமுகப் பெருமானின் அவதார ஞானியே ஆறுமுக அரங்க மகானே! உம்மை காணக் கண்கோடி வேண்டுமப்பா, உம்மை கண்டு வணங்கிட ஞானம் வேண்டுமப்பா, தான் என்ற கொடும் செருக்கை வென்று தயவே வடிவமாக வந்துதித்த வள்ளல் ஆறுமுக அரங்கமகா தேசிகரை அனுகி ஆசிபெற புண்ணிய பலம் வேண்டுமப்பா. அற்புதமும்

ஆற்றலும் நிறைந்திட்ட அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை உலகறியக் கூறியே சோபகிருது வருடம் ஆனி மாதம் **31**ம் நாள் **16.07.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் **07**ம் நாள் **23.07.2023** ஞாயிற்றுக்கிழமை வரை இந்தியா தமிழகத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்கமகானுக்கு அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

கலியுகத்தினில் செய்திட்ட தவறுகளுக்கான தீர்ப்புகள் எல்லாம் வள்ளல் மகா சக்திகளின் செயல்பாட்டினால் அநீதி புரிந்தவர்கள் மீது செயல்பட்டு தீர்ப்புகளாய் வெளிவர இருக்கின்றதப்பா. தீர்ப்புகளின் முடிவினிலே ஊழல் புரிந்தோர் எல்லாம் வரிப்பணத்தை சுருட்டி தனக்காக பதுக்கி வைத்தோர் வைத்தோர்கள் எல்லாம் யாருக்கும் தெரியாது என மறைத்து செய்தாலும் அவையெல்லாம் மக்களுக்கு வெட்ட வெளிச்சமாக வெளிப்பட்டு தவறு செய்தோர் ஏன் இந்த தவறுகளை செய்தோம் என வருந்துமாறு இகழ்ச்சி அடைவார் இழிவான நிலையை அடைவார்கள்.

கலியின் கோரப்பிடியினுள் அகப்பட்டு தவறு செய்தோர்க்கு கலியுக முடிவு நீதியினால் வெளிப்பட்டு வரலாறு படைக்குமப்பா. எண்ணங்களில் களங்கம் உடையவர்கள், பொதுநலம் மறந்து தனக்கென சுயநலமாக வாழ்வோர்கள், தவறான வழியில் சென்று பொருள் ஈட்டுவோர் எல்லாம் துன்பத்திற்கு ஆளாவதற்கு முன்னேர திருந்திட வேண்டுமப்பா.

முன்செய்த பாவங்களையும் போக்கி ஊழ்வினை போக்கி அவர்களை நன்னெறிபடுத்தி காக்கின்ற மகா ஞானியர் ஆறுமுக அரங்க மகா தேசிகனார் வாழும் இடமாம் துறையூர் ஓங்காரக்குடிலினை அனுகி அண்ணல் அரங்க மகான் திருவடி பணிந்து அரங்கமகான் கூறும் தரும ஞான வழிகளை பின்பற்றி நடந்திட அவரவர் இதுவரை செய்திட்ட பதுக்கல் சுரண்டல் ஊழல்களால் உண்டான வினைகள் அகன்று போவதோடு இனியும் அந்த வித தீமையான செயல்கள் செய்யாமல் தருமங்களை செய்து தருமபலனாக மாறிடுமப்பா.

வினை அகன்று தருமபலம் பெருகி நாட்டில் நல்லாட்சி ஞான ஆட்சியாக மக்களை பாதுகாக்கும் மதிக்கும் வகையிலே முருகப்பெருமானின் ஆசி பெற்ற ஆட்சியர்களை கொண்ட நாடாக மாறி சிறப்படையுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி —சுபம்—